(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 37.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 யூலை 12 வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க
கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
கௌரவ அஸோக அபேசிங்ஹ
கௌரவ துஷார இந்துனில் அமரசேன
கௌரவ ஜே.சீ. அலவத்துவல
கௌரவ டலஸ் அழகப்பெரும
கௌரவ திஸகுட்டி ஆரச்சி
கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட
கௌரவ கோவிந்தன் கருணாகரம்
கௌரவ கயந்த கருணாதிலக்க
கௌரவ ஜயந்த கெட்டகொட
கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல
கௌரவ சட்டத்தரணி உதயன கிரிந்திகொட
கௌரவ கே. எஸ். குகதாசன்
கௌரவ லலித் வர்ண குமார
கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி
கௌரவ வேலு குமார்
கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு
கௌரவ மனோ கணேசன்
கௌரவ உதய கம்மன்பில
கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி
கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன
கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன
கௌரவ தயாசிறி ஜயசேக்கர
கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ துமிந்த திசாநாயக்க
கௌரவ எஸ். பீ. திசாநாயக்க
கௌரவ சாரதீ துஷ்மந்த
கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய
கௌரவ இசுரு தொடன்கொட
கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த
கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன
கௌரவ அசங்க நவரத்ன
கௌரவ கிங்ஸ் நெல்சன்
கௌரவ சு. நோகராதலிங்கம்
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ நிமல் பியதிஸ்ஸ
கௌரவ தம்மிக்க பெரேரா
கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

**கௌரவ ஜகத் பிரியங்கர**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ சட்டத்தரணி எஸ். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார**

**கௌரவ நிபுண ரணவக**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 32 ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 2366/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2024); மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டிற்கான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை

ஆகியவற்றை சமர்ப்பித்து அவ்வறிவித்தல் மற்றும் அறிக்கை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தாய்லாந்து இராச்சியத்திற்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) கல்வி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்பித்து அவ்வறிக்கை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து இவ்வொழுங்குவிதிகள் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை மின்சார சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி டப்ளியூ.டி.ஜே. செனெவிரத்ன அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கும் சில நிறுவனங்களின் கூட்டமைப்பிற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட நிகழ்நிலை வீசா மற்றும் கடவுச்சீட்டு விண்ணப்ப சேவைகளை புறத்திறனீட்டம் தொடர்பிலான குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) மெல்சிரிபுர, அம்பன்பொல எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.யூ. மதுர விஜயபாலவினது 2024.06.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கலகெதர, உணபதயாய, இல. 185 – பீ யில் வதியும் திருமதி ஜி.ஏ. சுபத்ராவினது 2024.06.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஜே.சீ. அலவதுவல சமர்ப்பித்தார்.

(2) பத்தரமுல்ல, பன்னிபிட்டிய வீதி, தர்ஷன மாவத்தை, இல. 139/13 (1011) எனும் முகவரியில் வதியும் திரு. எம்.ஏ. கௌசால் மென்டிஸினது 2024.05.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24 (2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்குவாராக” என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.10.28 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்கினார்.)

**5. விளையாட்டு அமைச்சின் கணக்காய்வு மற்றும் சட்டப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்:** கௌரவ ஹேஷா விதானகே அனுவதிக்க கௌரவ றோஹண பண்டார பிரேரித்தார்,— தற்போது இலங்கையிலுள்ள கிரிக்கெட் உள்ளிட்ட பல விளையாட்டுச் சங்கங்களில் ஊழல் மலிந்து காணப்படுவதால், இந்த நிலைமையைத் தடுப்பதற்காக விளையாட்டுத்துறை அமைச்சின் கணக்காய்வு மற்றும் சட்டப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா. 40/2024]

“கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்குவாராக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.10.40 மணிக்கு கௌரவ மதுர விதானகே தலைமை தாங்கினார்.)

“கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்குவாராக” என கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.11.00 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்கினார்.)

“கௌரவ கிங்ஸ் நெல்சன் தலைமை தாங்குவாராக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.47 மணிக்கு கௌரவ கிங்ஸ் நெல்சன் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. மதத் தீவிரவாதத்தினை தடுப்பதன் அவசியம்:** கௌரவ உபுல் கலப்பத்தி அனுவதிக்க கௌரவ ஹேஷா விதானகே பின்வருமாறு பிரேரரித்தார்,— எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு துறையிலும் தீவிரவாதக் கருத்துக்கள் காணப்படுவது மிகவும் பாதகமானது என்பதாலும், உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் பின்னர் மதத் தீவிரவாதம் தொடர்பாக சமூகத்தில் பாரிய கருத்தாடல் ஏற்பட்டிருப்பதாலும் மதத் தீவிரவாதம் உருவாவதையும் ஊக்குவிக்கப்படுவதையும் தடுப்பதற்கும் ஏற்கனவே அதற்கு இரையாகியுள்ள நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் துரித வேலைத்திட்டமொன்றை அசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.10/2024]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் Z- புள்ளி (Z-Score ) அடிப்படையில் அரசதுறை சார்ந்த சகல தொழில் வெற்றிடங்களையும் நிரப்புதல்**: கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார அனுவதிக்க கௌரவ டலஸ் அழகப்பெரும பின்வருமாறு பிரேரித்தார்,— அரச சேவைக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளும் போது முந்திய அரசாங்கங்களும் தற்போதைய அரசாங்கமும் அரசியல் பக்கச்சார்பு அல்லது விருப்பு வெறுப்பின் அடிப்படையில் பின்பற்றியுள்ள கொள்கைகள் அரச சேவையின் சுயாதீனத் தன்மைக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாலும், அதன்

காரணமாக தீவிர அரசியல்மயப்படுத்தலுக்கு உட்பட்டுள்ள அரச சேவையை முழுமையாக சுயாதீனம் கொண்ட ஒன்றாக மாற்றவேண்டிய தேவை உள்ளதாலும், கல்வித் தகைமைகளின் அடிப்படையில் மாத்திரம் தொழில்களை வழங்கும்போது திறமையான மற்றும் தகைமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளுக்கு நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படுவதால் இளைஞர்களின் விரக்தியை அடியோடு ஒழிக்க அதன் மூலம் வாய்ப்புக் கிடைப்பதாலும், மாவட்டத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கான வாய்ப்பு சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு கிடைப்பதன் ஊடாக தொழில் பெறுநர்களின் பொருளாதார பாதுகாப்பு மற்றும் உயர் வினைத்திறன் கொண்ட சேவையை அரச துறைக்குப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதாலும், அனைத்து அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் மாகாண சபைகள், அனைத்து இணை நிறுவனங்களிலும் தொழில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் Z-புள்ளியினை கவனத்தில் கொள்ள அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. (பா/18/2024 )

“கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.1.10 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சட்டத்தரணி உதயன கிரிந்திகொட தலைமை தாங்குவாராக” என கௌரவ முஜிபுர் ரஹுமான் அனுவதிக்க கௌரவ டலஸ் அழகப்பெரும பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.1.25 மணிக்கு கௌரவ சட்டத்தரணி உதயன கிரிந்திகொட தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றைப் பிரகடனப்படுத்தல்:** கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன் அனுவதிக்க, கௌரவ வேலு குமார் பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையின் வரலாற்றில் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ள சமூகமாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுவதாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுத்தனரென்பதாலும், அத்தகைய ஜனநாயக உரிமைப் போராட்டங்களில் உயிர்நீத்த தொழிற்சங்க தியாகிகளைப் பொதுவானதொரு நாளில் நினைவுகூரவேண்டுமென்பது இலங்கைவாழ் இந்தியா வம்சாவழி மலையக மக்களின் நெடுநாள் கோரிக்கையாக இருப்பதாலும், 1939 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1940 ஆம் ஆண்டு ஜனவரி வரை சம்பள உயர்வு கோரி இலங்கையில் இடம்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கப் போராட்டத்தின் போது வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் “முல்லோயா கோவிந்தன்” என்ற தொழிலாளர் ஒருவர் உயிர்நீத்துள்ளதாலும், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அறவழிப் போராட்டத்தில் உயிர்நீத்த முதலாவது தொழிலாளியையும் மற்றும் அதன்பின் இடம்பெற்ற பல தொழிற்சங்கப் போராட்டங்களில் மலையப் பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் போராடி உயிர்நீத்த ஏனையோரையும் நினைவுகூரும் வகையில், முதலாவது மலையகத் தொழிற்சங்கத் தியாகி உயிர்நீத்த தினமாகிய ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. பா.37/2024

“கௌரவ டீ.. வீரசிங்க தலைமை தாங்குவாராக” என கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன் அனுவதிக்க கௌரவ புத்திக பத்திறண பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப .2.09 மணிக்கு கௌரவ டீ. வீரசிங்க தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்**: கௌரவ வீரசுமண வீரசிங்க அனுவதிக்க கௌரவ புத்திக பத்திறண பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. ( பா. 1/2024)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஒத்திவைப்பு:** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நேரம் பி.ப. 3.03 மணிக்கு சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினரால் 2024 யூலை 23 ஆம் திகதி மு.ப. 9.30 வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது